இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 336 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 31 – ஞாயிற்றுக்கிழமை 16 ஜூலை 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 336 : Thiruvalluvar Year - 2054 - Aani 31 - Sunday 16 July 2023 - Chennai 16 Pages ₹ 5.00





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2023) மதுரை புதுநத்தம் சாலையில், 2, 13, 338 சதுர அடி பரப்பளவில், தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், எச்.சி.எல். குழுமத்தின் நிறுவனர் ஷிவ் நாடார், தலைவர் திருமதி ரோஷினி நாடார், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர் பெருமக்கள், மாண்பமை நீதியரசர்கள், மதுரை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ். சங்கீதா, , மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திராவிட இயக்கம் என்றாலே அறிவியக்கம்தான்; அதனையொட்டியே - இந்த

# கலைஞர் நூற்றாண்டு நூலகம்!

## மதுரையில் உலகத்தரத்தில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்தை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரை!

**மதுரை ஜூலை 16 -**

**திராவிட இயக்கம் என்றாலே அறிவியக்கம்தான்; அதனையொட்டியே இந்த கலைஞர் நூற்றாண்டு நூலகம் என்று மதுரையில் உலகத் தரத்தில் கட்டப்பட்ட நூலகத்தை திறந்து வைத்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுச்சி உரை ஆற்றுகையில் பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2023) மதுரை புதுநத்தம் சாலையில் அமைந்துள்ள பொதுப்பணித் துறை வளாகத்தில் தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு :-

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சியின் இரு கண்கள் என நான் அடிக்கடி சொல்வது, கல்வியும் சுகாதாரமும்தான்.

அதனால் தான், கலைஞர் நூற்றாண்டு தொடக்கமான கடந்த ஜூன் மாதம்

15ஆம் தேதி அன்று கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையை சென்னை, சைதாப்பேட்டை, கிண்டியில் திறந்து வைத்தேன். ஒரு மாதம் கழித்து ஜூலை 15ஆம் நாளான இன்றைக்கு கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மதுரையில் திறந்து வைத்திருக்கின்றேன். அந்த பெருமிதத்தோடு இங்கு வந்துள்ள அனைவரையும் நான் வருக, வருக, வருக என வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

நீர்வளத்துறை அமைச்சர் என்னுடைய ஆரூயிர் அண்ணன் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களே! சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பெருமை சேர்த்திருக்கக்கூடிய எச்.சி.எல். நிறு வனத்தினுடைய ஷிவ் நாடார் அவர்களே, உயர் நீதிமன்றத்தினுடைய நீதியரசர்களே, எச்.சி.எல். குழுமத்தின் தலைவர் திருமதி ரோஷினி அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்களே, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளே! மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே! பல்வேறு மாவட்டங்களிலிருந்து வருகை தந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! சிறப்பு அழைப்பாளர்களே! ஆசிரியர் பெருமக்களே! எழுத்தாளர்களே! வாசகர்களே! என் பாசத்திற்கும் பேரன்புக்கும் உரிய மாணவச் செல்வங்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய இனிய நண்பர்களே, என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்வான் இந்த ஸ்டாலின் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் சென்னையில் மருத்துவமனையும், மதுரையில் இந்த நூலகமும்.

இவை இரண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அளிக்காத வாக்குறுதிகள்!

தமிழ்நாட்டினுடைய தலைநகர் சென்னை என்றால், இந்த மதுரை, தமிழ்நாட்டினுடைய கலைநகர்!

**அண்ணா நூற்றாண்டு நூலகமும் - கலைஞர் நூற்றாண்டு நூலகமும்!**

தலைநகரில், தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டில், அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அமைத்துத் தந்தார் அவர் தம்பி கலைஞர்!

இன்று அந்த தலைவர் கலைஞரின் நூற்றாண்டில், இந்தக் கலைநகரில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் எனும் தென் தமிழ்நாட்டின் அறிவாலயத்தை இந்த அடியேன் அமைத்திருக்கிறேன்.

**சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்வான் இந்த ஸ்டாலின் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் சென்னையில் மருத்துவமனையும், மதுரையில் இந்த நூலகமும். இவை இரண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அளிக்காத வாக்குறுதிகள்! தமிழ்நாட்டினுடைய தலைநகர் சென்னை என்றால், இந்த மதுரை, தமிழ்நாட்டினுடைய கலைநகர்!**

இந்த நூலகத்தை திறந்து வைக்கக்கூடிய பெரும் வாய்ப்பும், பெருமையும் எனக்கு கிடைத்திருப்பதை எண்ணி எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த இந்த மாமதுரையில் சங்ககால இலக்கியங்களை சாமானியருக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் சங்கத்தமிழ் இயற்றிய மாமதுரையில் நூலகம் வைக்காமல் வேறு எங்கு வைக்க முடியும்.

சிலப்பதிகாரம் குறித்தும் காற்சிலம்போடு நீதி கேட்ட கண்ணகி குறித்தும் முத்தமிழறிஞர் கலைஞர் தீட்டாத எழுத்து ஓவியங்கள் இல்லை. `அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என அறச்சீற்றம் கொண்டு கண்ணகி எரித்திட்ட இந்த நகரத்தில் இலட்சக்கணக்கான நூல்கள் கொண்ட இந்த நூலகத்தினால் அறிவுத் தீ பரவ போகிறது! திராவிட இயக்கம் என்றாலே அறிவியக்கம்தான்!

**அரசியல் இயக்கம் மட்டுமல்ல ; அறிவியக்கம்!**

தமிழ்ச் சமுதாயத்தோட எழுச்சிக்கும், மீட்சிக்கும் தேவையான கருத்துக்களை எழுதி, பேசி, படித்து வளர்ந்தவர்கள்தான் திராவிட இயக்கத்தினர்! திராவிட முன்னேற்றக் கழகத்தோட தலைமைக் கழகத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அதற்கு அறிவகம் என்று பெயர் வைத்தார். சென்னை, அண்ணா சாலையில் புதிதாக தலைமைக் கழகத்தை அமைத்த தலைவர் கலைஞர் அவர்கள் 'அண்ணா அறிவாலயம்' என்று பெயர் வைத்தார்கள். ஏனென்றால், இது அரசியல் இயக்கம் மட்டும் இல்லை! அறிவியக்கம்!

படிப்பகங்களால் வளர்ந்து, ஆட்சிப் பொறுப்புக்கு வந்து இன்று பிரம்மாண்டமான நூலகங்களை கட்டியெழுப்பிக் கொண்டு இருக்கிறோம். 2 லட்சத்து 13 ஆயிரத்து 338 சதுர அடி பரப்பளவில், 120 கோடியே 75 இலட்ச ரூபாய் மதிப்பில் இந்த கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை அழகாகவும், அற்புதமாகவும் உருவாக்கிக் கொடுத்த எதிலும் வல்லவர் என்று அழைக்கப்படும், நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்களையும், மாணவர்களின் நெஞ்சம் அறிந்த அன்பு தம்பி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களையும் நான் மனதார பாராட்டுகிறேன்.

பொதுப்பணி மற்றும் பள்ளிக்கல்வித் துறை அதிகாரிகள் உள்ளிட்ட இந்த நூலகம் இவ்வளவு பிரம்மாண்டமாக அமைய கடுமையாக உழைத்திருக்கக்கூடிய

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

# மதுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மாபெரும் வரவேற்பு!

## விமான நிலையம் முதல் அரசு விருந்தினர் மாளிகை வரை 18 கி.மீ. தூரத்திற்கு வழியெங்கும் மக்கள் திரண்டனர்!

மதுரை, ஜூலை 16 -

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைக்க மதுரை வருகைதந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பொதுமக்களும், கழகத்தினரும் திரண்டு வந்து பிரம்மாண்ட வரவேற்பு அளித்தனர்.

தமிழ் நகராம் மாமதுரையில் உலகத் தரத்தில் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று மாலை திறந்து வைத்தார்.

இதற்காக சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை வருகை தந்தார். மதுரை விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அமைச்சர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பத்திரப்பதிவுத்துறை அமைச்சரும் வடக்கு மாவட்டச் செயலாளருமான மூர்த்தி, மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி, தெற்கு மாவட்டச் செயலாளர் மணிமாறன் ஆகியோர் தலைமையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அமைச்சர்கள் பெரியசாமி, பொன்முடி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பெரியகருப்பன், சக்கரபாணி, ராஜகண்ணப்பன், பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி உள்ளிட்டோரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்றனர்.

இதைத்தொடர்ந்து மதுரை விமான நிலையத்தில் இருந்து தல்லாகுளத்தில் உள்ள அரசு விருந்தினர் மாளிகைக்கு வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சாலையின் இருபுறமும் பொதுமக்கள் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர். மதுரை பெருங்குடி, பெரியார் நகர் உள்ளிட்ட இடங்களில் மேளதாளம் முழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

விரகனூர் சுற்றுச்சாலை ரவுண்டானா, வண்டியூர், அண்ணாநகர், கே.கே.நகர் மாவட்ட நீதிமன்றம் உள்ளிட்ட இடங்களில் சாலையின் இருபுறமும், விமான நிலையம் முதல் அரசு விருந்தினர் மாளிகை வரையிலான சுமார் 18 கிலோ மீட்டர் தூரத்திற்கும் சாலையில் பொதுமக்கள் திரண்டு நின்று முதலமைச்சரை வரவேற்றனர்.

கரகாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரை உள்ளிட்ட கிராமிய நிகழ்ச்சிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.



மூதூர் மதுரையில் முதல்வருக்கு எழுச்சிமிகு வரவேற்பு!